[Sri S. Lazar] [3rd November 1958

லட்சியத்தைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். மற்ற நாடுகளிலே, குறிப்பாக கானடாவிலே, தலைக்கு 4,000 யூனிட் உபயோகப்படுத்தக்கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மாகாணத்திலே இப்பொழுது இருக்கும் 36 யூனிட் அளவு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் 60 யூனிட் ஆகலாமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய லட்சியம் 4,000 யூனிட் எவ்வளவு சீக்கிரமாக அடைய வேண்டுமோ, அவ்வளவு சீக்கிரமாக அடைய வேண்டுமென்பது.

இன்னொரு இடத்திலே உள்ள குறிப்பை வாசித்ததாக எனக்கு ஞாபகம் வருகிறது. அதாவது, அமெரிக்கா நாட்டிலே ஆயிரம் பேர் இருக்கக்கூடிய கிராமங்களில் எல்லாம் மின்சார சக்தி வழங்கப்பட்டிருக்கிறது என்று படித்ததாக ஞாபகம். இந்த லட்சியத்தை அடையவேண்டியது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் ஏக்கருக்கு 40 ரூபாய் செலவாகுமென்று குறிப்பில் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஏக்கரை சாகுபடிக்குக் கொண்டுவந்து அறுவடை செய்யவேண்டுமென்றால், 40 ரூபாயாகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நீரில்லாமல் நிலக்கரியை வைத்துக்கொண்டு தெர்மல் ஸ்டேஷனிலிருந்து மின்சார சக்தியை சப்ளை செய்தால், ஒரு ஹார்ஸ் பவருக்கு 15 ரூபாய் என்று கணக்கிட்டால் ஏறக்குறைய 84 ரூபாயாகிறது. 40 ரூபாயென்று வைத்திருக்கிறார்கள். ஒரு வேளை விவசாய அபிவிருத்தியை முன்னிட்டு, 44 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும்கூட சராசரி செலவாகக் கூடிய முறையில் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இருக்கும்படி இந்த ஏற்பாட்டைச் செய்தால், உண்மையிலேயே அது நல்ல முறையாக இருக்கும்.

கடைசியாக லைசென்சுகளைப் பொறுத்த வரையில், ஒன்று லைசென்சுகள் முறை அப்படியே இருக்க வேண்டும் என்ற கொள்கை வரையறுக்கப்படவேண்டும். அல்லது அவர்களை நீக்கிவிட்டு இந்தப் போர்டாரே நடத்த வேண்டும். இப்பொழுது இருக்கிற 13 லைசென்சுகளிலே, எங்கள் பகுதியிலே இருக்கிற லைசென்சியைப் பொறுத்த வரையில் சரியானபடி காரியம் நடந்துகொண்டு வரவில்லையென்பது தெரிந்ததே. அதைப் பற்றிச் சரியான ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. tomorrow.

The House then adjourned.

IX.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules, Orders and Notifications.

149. *Notification issued with G.O. No.* 3413, *Revenue, dated 12th September* 1958 *amending form B of the Madras Plantations Agricultural Income-tax (Appeal and Revision) Rules*, 1955. [*Laid on the table of th House under section* 61 (3) *of the Madras Plantation Agricultural Income-tax Act*, 1955 (Madras Act V of 1955).]

B. Reports and other papers.

64. *Speech of Hon. Sri V. Ramiah, Minister for Electricity initiating the discussion on the Annual Financial Statement of the Madras Electricity Board for* 1958–59.

65. *Short review on the activities and achievements of the Highways Department during the first half-year of* 1957–58 (*from* 1*st April to* 30*th September* 1957). (*Both English and Tamil.*)

66. *Report of the Select Committee appointed to consider the amendments to the Madras Assembly Rules.*